# கருஞ்சட்டைத் தமிழர்


ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • டிசம்பர் 28, 2019

Weekly E-paper • December 28, 2019







# ‘ஒரே மதம் வேண்டும் ஒரே சாதி கூடாது! இதுவே பாஜகவின் நிலைப்பாடு’

- பேராசிரியர் கருணானந்தம்

## அ.தி.மு.க.வின் துரோகம்!

தலையங்கம்

## குடியுரிமைச் சட்ட எதிர்ப்புப் பேரணி...

படங்கள்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையிதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • டிசம்பர் 28, 2019

Weekly E-paper • December 28, 2019


# ‘ஒரே மதம் வேண்டும் ஒரே சாதி கூடாது! இதுவே பாஜகவின் நிலைப்பாடு’

**- பேராசிரியர் கருணானந்தம்**

**1. குடியுரிமைத் திருத்தச் சட்டம்(CAA) 2019 வந்ததற்குப் பிறகு தேசிய குடிமக்கள் பதிவேடு(NCR) தயாரிப்பதற்கான அடிப்படையாகத் தேசிய மக்கள்தொகைப் பதிவு(NPR)க்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. எல்லா மாநிலங்களிலும் தேசிய குடிமக்கள் பதிவேடு கொண்டு வரப் போகிறோம் என்று அமித் ஷா சொன்னார். பின்னர் மோடி அப்படி ஒன்று இதுவரை பேசப்படவில்லை என்று சொன்னார். அதற்கு அடுத்து முரளிதரராவ் "பிரதமர் NCR இல்லை என்று சொல்லவில்லை இப்போதைக்கு இல்லை என்றுதான் சொன்னார்" என்று சொன்னார். ஏன் ஒரு விஷயத்தை இப்படி மாற்றி மாற்றிச் சொல்கிறார்கள்?**

இது ஏமாற்றுகிற விஷயம்தான். அவர்கள் எப்பொழுதுமே தாங்கள் விரும்புவதை நடைமுறைப் படுத்திக்கொண்டே இருப்பார்கள். நாம் கேட்கும்போது இல்லை என்று சொல்வார்கள். புதிய கல்விக் கொள்கை கூட நாடாளுமன்றத்தில் முழுமையான விவாதத்திற்கு இன்னும் கொண்டுவரப்படவில்லை. ஆனால் ஒவ்வொன்றாக நடைமுறைப்படுத்திக் கொண்டேதான் இருக்கிறார்கள். கேட்டால் நாங்கள் இன்னும் முடிவுக்கு வரவில்லை என்று சொல்வார்கள். இது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று வெளியில் பொய் சொல்வார்கள். நாடாளுமன்ற விதிகள் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. ஜனநாயக முறைகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. நினைத்ததை நடத்துவோம் என்கிற மாதிரிதான் இருக்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் நாங்கள் தேசியக் குடிமக்கள் பதிவேடு கொண்டு வரப் போகிறோம் என்று அமித் ஷா நாடாளுமன்றத்தில் சொன்னார். நாடாளுமன்றத்தில் மோடி அதை மறுக்கவில்லை. நாடாளுமன்றக் குறிப்புகளில் அது இருக்கிறது. அப்படி இருக்கிறது என்றால் அது அமைச்சருடைய உறுதியான திட்டம் என்று அர்த்தம். நாடாளுமன்றக் குறிப்புகளை நீக்காத வரைக்கும் எப்படி மோடியுடைய பேச்சை எடுத்துக்கொள்ள முடியும். தன்னுடைய அமைச்சரைக் கண்டித்து, அவர் பேசியதை மறுக்காதவர் மக்களிடம் அப்படி ஒன்றும் இல்லை என்று கூறுகிறார். அதைப் பற்றிப் பேசவே இல்லை என்கிறார். முரளிதரராவ் இப்போதைக்கு இல்லை என்கிறார். அப்படியானால் எப்போது வைத்திருக்கிறார்கள்?

**2. தேசிய மக்கள்தொகைப் பதிவு(NPR) என்பது 2010இல் காங்கிரஸ் கொண்டு வந்ததுதான் என்று அவர்கள் சொல்வது பற்றி.**



இது ஏற்கனவே காங்கிரஸ் 2010 இல் கொண்டு வந்ததுதான். காங்கிரஸ் கொண்டு வந்த அந்த ஆவணங்களில் இல்லாத நிபந்தனைகள் இதில் வருகிறதா இல்லையா? காங்கிரஸ் கொண்டு வந்த ஆவணமுறைகளைத் திருத்தித்தான் கொண்டு வந்திருக்கிறார்கள். காங்கிரஸ் மீது பழி போட்டுத் தப்பித்துக் கொள்ள முடியாது. அவர்கள் ஏற்கனவே இதை நடைமுறைப்படுத்தத் தொடங்கி விட்டார்கள். ஒரு ஒப்புதல் வாங்கிவிட்டு இதைச் செய்யவில்லை அவ்வளவுதான். மறைக்கப்பட்ட சதித் திட்டத்தை நிறைவேற்ற இதைக் கொண்டு வருகிறார்கள். இந்த நாட்டில் யாரெல்லாம் குடிமக்களாக இருக்க வேண்டும் என்று ஆளும் கட்சி மட்டும்தான் தீர்மானம் செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். அதை எதிர்ப்பவர்கள் எல்லாம் பாகிஸ்தானுக்கு போங்கள் என்று சொல்கிறார்கள். பாகிஸ்தான் இந்துஸ்தான் என்று இவர்கள் சொல்வதில் அர்த்தம் கிடையாது.

தொடர்ச்சி மறுபக்கம்

முன்பக்கத் தொடர்ச்சி...




**4. பல மாநிலங்களில் தடுப்புக்காவல் முகாம்கள் கட்டப்படும் காட்சிகளை நாம் பார்க்கிறோம். எதற்காக இப்படி அவசர அவசரமாகத் தடுப்புக்காவல் முகாம்கள் கட்டப்படுகின்றன?**

மாநில அரசுகளைத் தடுப்புக்காவல் முகாம்கள் அமைக்குமாறு இவர்கள் கட்டாயப்படுத்துகிறார்கள். முறையான ஆவணங்கள் இன்றித் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களுக்காக இந்த முகாம்கள் கட்டப்படுவதாகச் சொல்கிறார்கள். இது உண்மையில்லை. அந்த அளவிற்குப் பரவலாக வெளிநாட்டவர் ஆக்கிரமிப்பு இருப்பதாகத் தெரியவில்லை. வெளிநாட்டவர்கள் என்று சொன்னால், எந்தெந்த இடங்களில் விமான நிலையத்திற்கு வெளியில் இருந்து வரக்கூடிய வாய்ப்புகள் இருக்கிறதோ அங்கு மட்டும் இதுபோன்ற தடுப்புக்காவல் முகாம்கள் அமைத்தால் போதுமானது. ஆனால் இதை ஒவ்வொரு மாநிலத்திலும் கொண்டுவருவதற்கான முயற்சிகள் நடக்கின்றன. இங்கே வாழக்கூடியவர்கள் சிலரை அந்நியமாக்கப் பார்க்கிறார்கள். ஏனென்றால் ஈழ அகதிகள் வந்தபிறகுதான் இங்கு முகாம்கள் அமைக்கப்பட்டன. இங்கே இருக்கும் சிலரை அகதிகளாக மாற்ற அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதற்காகத்தான் இந்த ஏற்பாட்டைச் செய்து வருகிறார்கள்.

**3. RSS தலைவர் மோகன் பகவத் இங்குள்ள எல்லோரும் இந்துக்கள்தான் என்று சொல்லியிருக்கிறார். CAA-NPR-NCR இவற்றிற்கு எதிரான போராட்டங்கள் நடைபெறும் நிலையில் இந்தக் கருத்தை எவ்வாறு எடுத்துக்கொள்வது?**

எல்லோரும் இந்துக்கள் என்று சொல்கிறவர்கள் எல்லோரும் இந்தியர்கள் என்று சொல்ல வேண்டியதுதானே. எல்லோரையும் குழப்புவதற்கும் ஏமாற்றுவதற்கும் திசை திருப்புவதற்கும் பயன்படுத்தும் வார்த்தைகள் இவை. இந்துவுக்கும், இந்தியாவிற்கும் என்ன வித்தியாசம், அவர்கள் சொல்ல வேண்டும். எல்லோரும் இந்துக்கள் என்றால் இஸ்லாமியர்களுடைய பாபர் மசூதியை இடிக்க வேண்டிய அவசியம் இல்லையே. அப்படியானால் யார் இந்துக்கள், யார் இஸ்லாமியர்கள் என்ற வேறுபாட்டை அவர்கள் பார்க்கிறார்கள். இந்தநிலையில் இருக்கும்போது எல்லோரும் இந்துக்கள் என்று சொல்ல வேண்டிய அவசியம் என்ன? எல்லாமே மக்களைக் குழப்புவதற்குச் செய்யப்படுவது. ஏனென்றால் இவர்கள் திருட்டுத்தனமாக அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணான பல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதனால் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காக இதுபோன்ற வார்த்தைகளைச் சொல்கிறார்கள். ஒரே நாடு, எல்லோரும் இந்துக்கள் என்று சொல்கிறவர்கள் இந்துக்கள் எல்லோரும் ஒரே ஜாதி என்று சொல்ல வேண்டியது தானே. அப்படி அவர்கள் சொல்லவே இல்லையே.

**5. தேசியக் குடிமக்கள் பதிவேடு, தேசிய மக்கள் தொகைப் பதிவேடு போன்றவை இஸ்லாமிய மக்களைக் குறிவைத்து செய்யப்படுவதாகவே இருக்கிறது. குடியுரிமைத் திருத்தச் சட்டத்தில் கிறிஸ்தவர்களைச் சேர்த்திருக்கிறார்கள். இதை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

இஸ்லாமியர்கள் முதலில். பின்னால் எல்லோரும் வரப்போகிறார்கள். அவர்கள் கிறிஸ்தவர்களையும் கொன்றவர்கள்தான். எல்லா எதிர்ப்புகளையும் ஒரே நேரத்தில் கொண்டு வர வேண்டாம் என்பதற்காக முதலில் இஸ்லாமியர்கள் மேல் கை வைக்கிறார்கள். இது ஒரு முன் உதாரணமாக ஆகிவிட்டால், அதற்குப் பிறகு சிறு பகுதியினரை எளிதில் வெளியேற்றி விடுவார்கள். ஆதார் என்பது தான் இறுதியான அடிப்படை ஆவணம் என்று சொன்னவர்கள், எத்தனை அடிப்படை ஆவணங்களை உருவாக்குவார்கள்? "ஒரே நாடு ஒரே ஆதார்" என்று நிறுத்திக் கொள்ள வேண்டியதுதானே. அதிலேயே பயோமெட்ரிக் விவரங்கள் எல்லாம் இருக்கின்றனவே. அவர்களுக்கு உள்நோக்கம் வேறு இருப்பதால்தானே வேறு வேறு பெயரில் இப்போது கொண்டு வருகிறார்கள். அவர்கள் நோக்கம் நிறைவேறும் வரை புதுப்புது விளக்கங்களையும் முறைகளையும் கொண்டு வருவார்கள்.

**நேர்காணல் மா. உதயகுமார்**

**கருஞ்சட்டைப் பதிப்பகம்**

**இணையத்தள விற்பனை (online sales)**

கருஞ்சட்டைப் பதிப்பக வெளியீடுகளும், தோழர் சுபவீ, பேராசிரியர் அருணன் ஆகியோர் எழுதியுள்ள பிற நூல்களும் இப்போது இணையத்தள விற்பனையில் உள்ளன. இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்தும் நூல்களை இணைய வழியில் அனைவரும் பெற்றுக்கொள்ளலாம். வங்கி அட்டைகள் மூலமோ, அல்லது வீட்டிற்குப் புத்தகம் வரும்போது பணம் செலுத்தியோ நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இணையத்தள முகவரி : karunchattaibooks.com

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**
**ஸ்ரீவித்யா**

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

## தந்தை பெரியாரின் நினைவு நாள்

பேரவைத் தலைமை அலுவலகம்,சென்னை



மதுரை



உடுமலைப்பேட்டை



தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## அ.தி.மு.க.வின் துரோகம்!

இந்தியக் குடியுரிமைச் சட்டம் நிறைவேறப் பெரிதும் துணை நின்றது அ.இ.அ.தி.மு.க.

இச்சட்டத்திற்கு எதிராக இந்தியா முழுவதும் மக்கள் போராட்டம் மிக வலிமையாக எழுந்ததைக் கண்ட அ.தி.மு.க. செய்வதறியாது திகைத்து நிற்கிறது.

இதைச் சமாளிக்க ஈழத்தமிழ் அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வாங்கித்தருவதாக எடப்பாடி பழனிச்சாமியும், ஓ.பன்னீர்ச்செல்வமும் சொல்ல ஆரம்பித்தார்கள். இதற்காக மோடியையும், அமித்ஷாவையும் ஓடிப் போய்ச் சந்தித்தார்கள்.

அமித்ஷா இதற்கு ஏற்பாடு செய்வதாகவும், மத்திய அரசு இதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டதாகவும் சொன்னார்கள்.

அதாவது கேழ்வரகில் நெய் வடிகிறது என்பதுதான் இதற்கான பொருள் என்று தோன்றுகிறது.

இந்த இரட்டைக் குடியுரிமையை ஒரு நிபந்தனையாக வைத்திருக்க வேண்டும் அ.தி.மு.க.

ஈழத்தமிழர்களுக்கு இரட்டை வாக்குரிமை கொடுக்க வேண்டும் என்றால், நிறைவேற்றப்பட்ட குடியுரிமைச் சட்டத்தில் இது சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் அப்படி ஏதும் இல்லாமல் பொத்தாம் பொதுவாகச் சகட்டு மேனிக்குச் சட்டம் நிறைவேற நிபந்தனை அற்ற ஆதரவைக் கொடுத்திருக்கிறது அ.தி.மு.க.

குடியுரிமைச் சட்டம் நிறைவேறிய பிறகு இரட்டைக் குடியுரிமை குறித்து மீண்டும் ஒரு சட்டத்திருத்தம் கொண்டுவர வேண்டும். அமித்ஷாவும், மோடியும் இதுவரை இரட்டைக் குடியுரிமை குறித்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

அப்படி இருக்க ஈழத்தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமையை எப்படிப் பெற்றுத் தருவார்கள் தமிழக முதல்வரும், துணை முதல்வரும்?

ஈழத்தமிழர்களுக்கு இரட்டை குடியுரிமை பெற்றுத்தருவதாக இவர்கள், தமிழக மக்களின் காதில் பூச்சுற்றி, ஏமாற்றி நாடகமாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தமிழகம் தெளிவாக உணர்ந்திருக்கிறது.

திண்டுக்கல்



# திமுக கூட்டணியின்

## குடியுரிமைச் சட்ட எதிர்ப்புப் பேரணி



## பேரணியில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை










Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,